உ

சிவமயம்

நாராயணோபநிடதம்

ெநு- அ.

இஃது

யஜுர்வேதத்தின் ஓர் சாகையிலுள்ளது

மூலபாடம் பொழிப்புரை விசேஷவுரைகளுடன்

——(*)——

சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராதிபரும்

பரசமய பஞ்சானன பண்டித பாஞ்சஜன்ய

ப்ரம்மஸ்ரீ

கு. ஸ்ரீநிவாஸ தீக்ஷிதரவர்களால்

——:(O):——

வடமொழியில் இயற்றப்பட்ட

நாராயணோபநிஷத்விருத்தி

என்றவியாக்யானத்துக்கிணங்க

அவர்களாலேயே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

தமது

(நடுக்காவேரி) ஜகத்குருயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1899

சுபம்

நாராயணோபநிடதத்தின்

முகவுரை.

—(*)—

நாராயணோபநிடதம் இரண்டுண்டு. ஒன்று யஜுர்வேதத்துள்ளது. மற்றொன்று அதர்வணவேதத்துள்ளது. இரண்டிற்கும் வேற்றுமை புலப்படவேண்டி இவ்வுபநிடதத்தை ''நாராயணோபநிடதம்'' என்றும், மற்றதை ''மகாநாராயணோபநிடதம்'' என்றும் வழங்குவார். இவ்வுபநிடதம் யஜுர்வேதத்திற்சேர்ந்ததே. முத்திகோபநிடதப் பிரமாணத்தால் இதனையும் அதர்வணவேதத்தில் சேர்ந்ததாமென மயக்குற்றவோர் சாராருமுளர். இவ்வுபநிடதம் ஸ்ரீமந்நாராயணன் பெருமையை நிரூபித்து, அந்நாராயணவழிபாட்டிற்கின்றியமையாத அஷ்டாக்ஷரமகாமந்திரத்தின் பெருமையையுந் நிரூபிக்கும். ஆதலாற்றான் இதனை நாராயணோபநிடதமென்பார். யஜுர்வேதத்திலேயே பூர்வநாராயணமென்ற புருஷசூக்தமும் உத்தரநாராயணமென்ற ஓர் அநுவாகமும் 'ஸஹஸ்ரசீர்ஷம்' என்று தொடங்கியமற்றொருபாகமும் ''அம்பஸ்யபாரே'' என்று தொடங்கிய பெரியதோர் உபநிடதமும் நாராயணம் என்று வழங்கப்படும். ஆயினும் அவற்றுள் புருஷசூக்தத்தையும் அதனடுத்தவநுவாகத்தையும் பெருவழக்கில் நாராயணம் என்றபொதுச்சொல்லாலும், பூர்வநாராயணம் உத்தரநாராயணம் என்ற சிறப்புச்சொல்லாலும் வழங்குவதன்றி உபநிடதமென்பதில்லை. அது பொருணிலை நோக்கின் உபநிடதமாயினும் இவ்வனேக நாராயணவுபநிடதங்களில் வேற்றுமை தோற்றுவதற்காக அங்ஙனமதனை யான்றோர் வழங்கினர்.

மற்ருெரு நாராயணாவுபநிடதத்துக்கு "யாஞ்ஞிகீ" என்றவடைசேர்த்து நாராயணீயாஞ்ஞிகீயுபநிஷத் என்பார். ஆகவே நாராயணோபநிஷத்தும் மகா நாராயணோபநிஷத்துமே இங்கு பிரஸ்தாபிக்கப்படவேண்டியன. அற்றேல் இவ்வுபநிடதம் நாராயணன்பெருமையை நிரூபித்தலால் நாராயணோபநிடதமானாற்போல், மகாநாராயணன்பெருமையிருக்கும் உபநிடதம் மகாநாராயணோபநிடதம் என்று பொருள் கொள்ளலாமோவெனின் அதுதவறு. நாராயணன்பெரியவன் சிறியவன் என்று இருவகை வழங்குவது வேத வைதிக சம்பிரதாய விருத்தமாதலால் என்க. மேலும் அளவின் பெருமை சிறுமைநோக்கி இவற்றிற்கு மகாநாராயணம் நாராயணமென்றபெயர்கள் அமைந்தனவெனலாமாகையால் அதுகுற்றமேயல்ல. இவ்வுபநிடதம் எந்தசாகையைச் சேர்ந்த தொன்ருயினும் இதனை மூதாசிரியர்பலர் எடுத்து வழங்கினர். அநேகர்சைவரும் வைணவரும் இதன்வாக்யங்களை பூர்வபக்ஷ சித்தாந்தங்களாக எடுத்து நிரூபித்திருக்கிருர்கள். ஸ்ரீகண்டசிவாசாரியர் அப்பயதீக்ஷிதாவர்கள் ஸ்ரீராமானுஜாசாரியர் மாத்துவாசாரியர் அவர்வழிசிடர் பரம்பரையோர் இவ்வுபநிடதத்தை விசாரித்திருக்கின்ருர். நாராயணம் மகாநாராயணம் ஸூபாலம்மகோபநிஷத்து முத்கலம் இவைகள் நாராயண பஞ்சோபநிஷத்துக்களெனவும் வழங்கப்படும். இவைகளுக்குள் இந்த நாராயணோபநிஷத்துக்கு ஸ்மார்த்தருள் அதாவது அத்வைதிகளில் ஒருவரும், விசிஷ்டாத்துவிதிகளில் ஒருவரும் வியாக்யானஞ்செய்திருக்கிருர்கள். மேலும் அநேக பூர்வமதாசாரியர்கள் இதன் தாற்பரியத்தை யவரவர்மதங்கட்கேற்ப நிரூபித்து வருகிருர்கள். ஆகவே யாம் அடியிற்கொண்ட சங்கற்பப் பிரகாரம் இவ்வுபநிடதத்திற்கு ஸ்ரீமதப்பயதீக்ஷிதாதி சிவாத்துவிதிகள் கொண்ட சம்பிரதாயத்தை யனுசரித்து அத்துவிதிகளின் வியாக்யா

ணத்திற்கிணங்கவோர் சிற்றுரையை வடமொழியில் செய்தோம், அதன்மொழிபெயர்ப்பும் தமிழறியுலகைநோக்கி யிங்கு சிறிதுஇயற்றப்பெற்றது- இதற்குமற்றயவுபநிடதங்கட்குக் கிடைத்த மாதுருகாசளகரிபத்திலும் அதிகம் அநேக பிராசீனமதக் கிரந்தங்களும் விசிஷ்டாத்துவித வியாக்கியானமொன்று மதிகமாம். இவைகளைக்கொண்டு பாடத்தை ஒருவாறு நிச்சயித்து பதங்களையும் வாக்கியங்களையும் பொருட்படுத்தினோம். அன்றி இத்தென்னாட்டிலும் வடநாடுகளிலும் இவ்வுபநிடதத்தைப் பாராயணம் செய்வோர் அனேகர்உண்டு. ஆகவே இதில் அனேகவிபரீத பாடங்கள் கலக்கவிடமில்லை. இதற்கிட்டசிற்றுரையைஎற்றுஎம்மைஆசீர்வதிக்கபிரம்மசிஷ்டர்களை வேண்டுகிறோம்.

கிரந்தகர்த்தர்.

நாராயணோபநிஷத்

பாராயணபாட:

—(*)—

ஸஹ நாவவத்விதி ஶாந்தி: ॥

ஓம் ॥ அத புருஷோ ஹ வை நாராயணோ(அ)காமயத | ப்ரஜா: ஸ்ருஜேயேதி | நாராயணாத்ப்ராணோ ஜாயதே | மன: ஸர்வேந்த்ரியாணி ச | கம் வாயுர்ஜ்யோதிராப: ப்ருதிவீ விஶ்வஸ்ய தாரிணீ | நாராயணாத்ப்ரஹ்மா ஜாயதே | நாராயணாத்ருத்ரோ ஜாயதே | நாராயணாதிந்த்ரோ ஜாயதே | நாராயணாத்ப்ரஜாபதி: ப்ரஜாயதே | நாராயணாத்த்வாதஶாதித்யா ருத்ரா வஸவஸ்ஸர்வாணி ச்சந்தாம்ஸி | நாராயணாதேவ ஸமுத்பத்யந்தே | நாராயணாத் ப்ரவர்தந்தே | நாராயணே ப்ரலீயந்தே | ஏதத்ருக்வேதஶிரோ(அ)தீதே | அத நித்யோ நாராயண: | ப்ரஹ்மா நாராயண: | ஶிவஶ்ச நாராயண: ஶக்ரஶ்ச நாராயண: | காலஶ்ச நாராயண: | திஶஶ்ச நாராயண: | விதிஶஶ்ச நாராயண: | ஊர்த்வஶ்ச நாராயண: | அதஶ்ச நாராயண: | அந்தர்பஹிஶ்ச நாராயண: | நாராயண ஏவேதக்ம் ஸர்வம் | யத்பூதம் யச்ச பவ்யம் | நிஷ்கலங்கோ நிரஞ்ஜனோ நிர்விகல்போ நிராக்யாத: ஶுத்தோ தேவ ஏகோ நாராயண: | ந த்விதீயோ(அ)ஸ்தி கஶ்சித் | ய ஏவம் வேத ஸ விஷ்ணுரேவ பவதி ஸ விஷ்ணுரேவ பவதி | ஏதத்யஜுர்வேதஶிரோ(அ)தீதே | ஓமித்யக்ரே வ்யாஹரேத் | நம இதி பஶ்சாத் | நாராயணாயேத்யுபரிஷ்டாத் | ஓமித்யேகாக்ஷரம் | நம இதி த்வே அக்ஷரே | நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி | ஏதத்வை நாராயணஸ்யாஷ்டாக்ஷரம் பதம் | யோ ஹ வை நாரா

யணஸ்யாஷ்டாக்ஷரம் பதமத்யேதி । அநபப்ருவஸ்ஸர்வமாயுரேதி । விந்ததே ப்ராஜாபத்யம் । ராயஸ்போஷம் கௌபத்யம் । ததோ'ம்ருதத்வமஶ்நுதே ததோ'ம்ருதத்வமஶ்நுத இதி ய ஏவம் வேத । ப்ரத்யகாநந்தம் ப்ரஹ்மபுருஷம் ப்ரணவஸ்வரூபம் । அகார உகார மகார இதி । தாநேகதா ஸமபவத்ததேதோமிதி । யமுக்த்வா முச்யதே யோகீ ஜந்மஸம்ஸாரபந்தநாத் । ஓம் நமோ நாராயணாயேதி மந்த்ரோபாஸக: । வைகுண்டபுவநம் கமிஷ்யதி । ததிதம் புண்டரீகம் விஜ்ஞாநகநம் தஸ்மாத்தடிதாபமாத்ரம் । ப்ரஹ்மண்யோ தேவகீபுத்ரோ ப்ரஹ்மண்யோ மதுஸூதந: । ஸர்வபூதஸ்தமேகம் நாராயணம் காரணபுருஷமகாரணம் பரம் ப்ரஹ்மோம் । ஏததர்வஶிரோ யோ'தீதே । ப்ராதரதீயாநோ ராத்ரிக்ருதம் பாபம் நாஶயதி । ஸாயமதீயாநோ திவஸக்ருதம் பாபம் நாஶயதி । மாத்யந்திநமாதித்யாபிமுகோ'தீயாந: பஞ்சமஹாபாதகோபபாதகாத் ப்ரமுச்யதே । ஸர்வவேதபாராயணபுண்யம் லபதே । நாராயணஸாயுஜ்யமவாப்நோதி । ஶ்ரீமந்நாராயணஸாயுஜ்யமவாப்நோதி । ய ஏவம் வேத । இத்யுபநிஷத் ।

ஓம் ஸஹ நாவவத்விதி ஶாந்தி: ।

நாராயணோபநிஷத் ஸமாப்தா ।

உ

சிவமயம்.

நாராயணோபநிஷத்
விருத்தி.

அவதரணிகை

இங்கறியவேண்டுவதிது. இப்பிரமவித்தை தைத்திரீய சாகையின் நாராயணோபநிடதத்துள்ள தகரவித்தையையனுசரித்து ஸ்ரீமன் நாராயணஸ்வரூபனாக பரமாத்துமாவை உபாசிக்கும்வழியைக்காட்டுகின்றது. கூர்மம்முதலிய புராணங்களிற் கூறியவாறு மூவகைப்பட்ட யோகிகளுள் முதற்பாவனையை யேற்றபௌதிக யோகிக்குரிய உபாஸ்தியை முன்னிட்டு அதற்கு விஷயமான ஸ்ரீமன் நாராயணன் பெருமையைவிரித்து நாராயணோபாஸ்தைக்கின்றியமையாத ஸ்ரீமதஷ்டாக்ஷரத்தின் பெருமையை நிரூபித்து அனுக்கிரஹிக்கும் முறையில் தோன்றுகின்றது.

அத புருஷோ ஹவை
நாராயணோகாமயத
ப்ரஜா: ஸ்ருஜேயேதி

(இ—ள்.) இனி புருஷனென்றே நாராயணன் நினைத்தான் பிரஜைகளையுண்டுபண்ணுவேனென்று. எ—று.

(வி—ரை.) 'இனி' = என்றசொல் மங்களத்தின்பொருட்டமைக்கப்பட்டதாதலின் ஒருகாம்பில் இருகனி என்றநியாயத்தால் வித்தையின் ஆரம்பத்தையும் குறிப்பதேயாம். புருஷனென்றே = வேதாந்தங்களில் புருஷனென வழங்கப்பட்ட ருத்திரன் நாராயணன். அவனையதிட்டித்து = அவன் ரூபனாய்; நினைத்தான் = சங்கற்பித்தான் பரிபாகம் பெற்ற பிராணிகருமங்களால் பிரேரிக்கப்பட்

பிரஜைகளை சிருஷ்டிக்கவேண்டுமென்ற சங்கற்பத்தை உடைத்தாயினான் என்பதுகருத்து. சிருஷ்டிப்பதெ ன்றால் அவரவர் கன்மங்களுக்கேற்றவாறு தநுகரணாதிகளைக் கொடுத்தருளுதல். ஆத்தேன் புருடன் என்ற சொல்லுக்கு ருத்திரன் என்றுபொருள் தனித்தோதியது எதனாலெனின் கூறுதும் கேண்மின் ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் [illegible] ஸஹஸ்ராக்ஷம் விஶ்வஶம்பு⁴வம். [illegible] ஸஹஸ்ரஶீர்ஷம், ஸஹஸ்ரம் [illegible]. ஸஹஸ்ர [illegible]. புருஷனன்றோ ருத்திரன்சத்து மஹான் அவனை வணங்குவோம். அப்புருடனுக்குப் புருடனை யறிவோம் ஸகஸ்ராக்ஷனை பெரியபிரபுவல்லவோ புருடன் புருஷனை சிருஷ்டிப்பவனை. முன்னேயுள்ளவன் யாம் புருஷன் யான் ஈசன் என்பதாதி பலவிடங்களில் வேதாந்தங்களில் புருஷனென்றசொல் ருத்திரனுக்கு வழங்கப்படுதலானும் 'புர்' என்றசொல்லுக்கு பட்டணங்கள் பொருள்; 'உஷ' என்பதற்கு கொளுத்துபவன் பொருள். ஆகவே முப்புரமெரித்த முதல்வனும் இச்சொல்லுக்குக்காரணப்பொருளாய் அமைவான் ஆதலானும் இச்சொல்லை எம்பிரானிடத்து காரணவிருடியாக்கி உரையிட்டோம். இதன் விரிவை எமது புருடசூக்தபாடியத்தில் காண்க. அங்ஙனமாயின் புருடனன்றோ நாராயணன் என்று தொடங்கிய இவ்வுபநிடதவாக்கியமே அச்சொல்லை நாராயணனிடத்தில் சேர்க்கவாற்றல் பெற்றதாமெனின் பெறாதேயாம். இந்த விதியிலநுவதிக்கப்படும் நாராயணனுக்கு விசேஷணமாயமைந்தமையால் அது விதியிற்சேராது. மேலே புருடன்என்றசொல் பரிபூர்ணன், முன்னேயுள்ளவன், சரீரத்துள்ளவன், சுவதந்திரன், அறிஞன, மனிதன் ருத்திரன், பிரமா, பரமாத்மா, ஜீவன், ஹரி இவர்களைச்சொல்லும் ஆற்றலுடையதே இச்சொல்லாயினும் இங்கு பிரகரணபலத்தால் ஸ்ரீமன் நாராயணனையே சொல்லுமென்பது உசிதமாகலாம் அவற்றிற்குப் பிரமாணங்கள் [illegible] ஸஹஸ்ர இதி விஜ்ஞாயதே. பூரணனாதலால்புருஷனெனச்சொல்லப்படுகிறான் என்றவாதூலசூத்திரமும் [illegible]

ஸாருஷஸ்ய ஸாருஷத்வம், நான்முன்னரே இங்கிருந்தே
னென்பதே புருடனிடத்தில் புருஷத்துவமாம் ஸாம்யம் ஸாரு
ஷீக்ஷேத சரீரத்துள்ள புருஷனைக்காண்கின்றனன் றுருக
தியும் ... க்ருதிஸ்ஸாபுராணத்ராக் ஷாகம் த்ராக்ஷெவ
ஷவாநவீ ஸவண்வவாஸாஷெவாயம் ஸாக்ஷாக்ஷ ஸாரு
ஷவத்தை|| பிரகிருதிசம்பந்தமின்மையாலும் சுதந்தரத்தாலும்
வியாபகத்தாலும் அந்தவாசுதேவனே புருடனெனச் சொல்லப்
படுவான் என்ற நரசிம்மபுராணவசனமும் ஸாருஷாவாத்ஸோ
கவ்ள. புருடனென்பது ஆன்மாவிற்கும் மனிதற்கும் பெயர்
என்ற அமரவசனமும் ... ஸாருஷோக்ஷா
ணம்ஸிவ|| ஸாருஷொ ... க்ருதிம
க்ஷணா|| ஈசுவரன் சேதனன் கர்த்தா. புருஷன், காரணன், வியமேன
என்றும் புருஷனென்பவன் சச்சிதாநந்த பரிபூரணசிவனென்ப
தாகி இதிஹாஸபுராணவசனங்களும் ...
ஸாருஷா ... ஸாருஷாயாத்ரு ஸாஹா
... ||பரமேஷ்டி, விசுவரேதஸ், புரு
ஷன், ஸ்வயம்பாஹனன், என்றப் புருடன் என்பது பிரமதேவன் பெ
யருமாம். மனிதன் ஆத்மா, பரமாத்மா, இவர்களைச் சொல்லும்
என்றமுகித்த யாதவகோசமும் ...
... ஸாருஷெ ...
... நாகந, பகவான், என்ற சொல்லும் அங்ஙனமேபுருடன்
என்ற சொல்லும் தனித்து நித்தியனுப் வாசுதேவனைக் குறிக்கும்
என்றும் ...
... புரு என்ற பெயருடைய இச்சரீரத்தில் சயனித்திருப்ப
தால் ஹரி புருஷனெனப்படுவானென்றுமுள்ள புராணவசனங்களு
மாம். இவற்றுள் நாராயணபதம் விசேஷியினிடத்தே முக்கிய
மாதலால் அதனை விசேடியமாக்க் கொள்ளுதற்கும் யோ
க்கியமாதலாற் விசேடணமாய் நின்ற புருடனென்ற சொல்லில்
எவ்வளவு பொருள்களடங்குமோ பொருட்பொருந்துமாறு அவை
களையே கொள்ளுவதுசிதமாம் புராணங்கள் கூறியவாறு நாராய

ணையே அதன் பொருளாயின் புனருக்திக்குற்றம்வரும் விசேடணமாதலும் கூடாது. யஸ்யாம் ... முதலியவற்றில் கூறப்படுவதும் ... ஐயமாவதற்கு லக்ஷணமென்று மீமாம்ஸகர் கூறும் நியாயவிரோதம் வருதலாலெனக்க. ... எனும் அச்சொல்லுக்கு இந்த பொருளைக் கொள்ளலாகாது ஆகாசம் காலம்முதலியவற்றும் அத்தனைமைக்கு ... தாலும் ஜகத்சிருஷ்டி சங்கல்பத்தில் அப்பேதார் காரணமென்றதலானும் எனக. முன்னேயுள்ளவனென்பதும் அறிஞனென்பதும அவ்வளவே இதரசேதனர்களுக்கும் உள்ள பெருமையாதலால் மனிதனென்ற பொருளை முற்றுமொவ்வாது பிரமா என்றபொருளைச் சொல்வோமெனினும் அதுவும் பொருந்தாது. எந்தவேதபாகத்திலும் பிரமதேவன் நாராயணகாரணனென்று நிரூபிக்கப்படாமையானும்யுக்திக்கொவ்வாமையானும் பரமாத்துமாவென்றபொருளை பொருத்தக்கூடுமாயினும் அது முற்றும் உற்று நோக்கிற்சேராது. நாராயணனென்ற பதத்தில் இருகுறியாலமைந்த இலக்குமிகுதித்தன்மைக்கு இஃது சிறப்பன்றாதலின் காரணவாற்றலால் அப்பதத்திற்கே அப்பொருளுமுண்டாதலாலெனக. நாரம் என்பது நரர்களெனப்படும் சேதனர்களின் சமூகமாதலானும் அதனிடமாய்க்கொண்டவன் நாராயணனாதலானுமெனக. புனருக்திக்குற்றம் இங்ஙனமாயின் வருமாமெனக. பரிசேடத்தால் ருத்திரனே அதன் பொருளாய்க்கொள்ளவேண்டும். அங்ஙனமாயிற் குடம் படம் என்பதாதிகளைப்போல் இருபொருள்களும் பொருந்துவது எங்ஙனமெனின் அன்றே அவ் விரு பொருள்களுக்கும்தாதாத்மியம் போதிக்கப்பட்டமையால் பொருந்துமெனக. இனிசொற்பொருத்த மொருவாறமையினும் ஒவ்வாப்பொருள்கள் ஒன்றோடொன்று சேராமைபற்றி பொருள் எங்ஙனம் பொருந்துமெனின் காரணகாரியங்களுக்கு ஒருவாறு வேற்றுமை தோன்றினும் அவை ஒன்றுபடுவதுபோல்இவையுமொன்றுபடுமெனக. அதற்கேல் நாரணனுக்கும் காரணன் உருத்திரனென்பது எங்ஙனம் பொருந்துமெனின் கூறுதும் ... ஆ ...

ஸ்வர்காத் யஜ்ஞம் வஸந்தயஸ்ய தாவஸந்தவஸாவ நவஸு ஸேரவார்:, விஷ்ணுர்ஸூர்யவர்ணஸு விசாநு ஜாதோவ ஹ ஸூர்ஹிவாதித்ய தீய, ஈதெலாமன்றோபிரமவிஷ்ணுருத்திரேந்திரர்கள் அவர்கள் பிறக்கின்றார்கள் எல்லா இந்திரியங்களும் என்றும் எவனொருவன் இவ்வுலகத்திற்கு முன்னுள்ளவன் எவனிடம் இவ்வுலகரக்ஷகன் பிறந்தான் என்றும் விஷ்ணுவல்லவோ பரமனையறிந்தவன் பெரிது பிறந்தான் மூன்றுவகையாள்வான் என்றுமுள்ளபலவிடங்களில் ஸ்ரீமன் நாராயணனுக்குக்காரணத்வங்கரையிடற்றண்ணலைக் குறித்ததமையாமெனக. இதனால்மட்டுடமைசந்தென்றவாறு சங்கரநாராயணன் சங்கற்பித்தான் என்றபொருளில் புருடனானநாராயணன் நினைத்தான்என்றதும் முற்றும்பொருந்தியதெனக. ஸர்வபஸ்யதஸ்ய த்வஸ்யேகம் ஸவத்ர யிவதம் ஸர்வதோ தஸ்மாத் மீண்டும் பலபதிகளைசிருஷ்டித்து அம்மஹாத்மா ஸர்வாதிபத்தியம் செய்கின்றான் என்பதாதிபலசுருதிவசனங்கள் இதனால்தழுவப்பட்டதென்க. அம்முப்பதிகளுள்பரபிரம்மத்திற்கடுத்தவரும் அவன் சக்திமயமாயமைந்தவரும். ஸ்ரீமன் நாராயணனேயென புராணங்கள்கூறிநிற்றலால் இங்கு அவரையேயெடுத்துப்புகழ்ந்ததாவுமெனக. இதற்குப்பிரமாணமாய் ஸவ்யஸாக்ஷிமயீ ஸம்ஹ்ருஷ்: ஸ்வர்ணம் ஸநாதன: ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம் விஷ்ணுர்ப்ரஹ்மமயோமஹாந் சர்வசக்திமயனாய் உள்ளவன் இவன்பிரமத்திற்கடுத்தவன் ராஜாதிராஜனெல்லோருக்கும் விஷ்ணுபிரம்மமயன் மஹான்என்பதாதிவசனங்கள். ஆதலாற்றான் அப்பயதீக்ஷிதசுவாமிகளும் ஸ்வாத்மம் ஸ்ரீஜாதம் ஸிரீஸமஹிமா நஹவஸ்யம்வியாதம் ஸக்தம் வாதவஸ்ரணயோநிர்தத்வமா: ஸ்வாநாம்ஸாத்ம ஸ்வதம் ஸ்வஜாதிரயிகம் ஜ்மதேதமூதோஜயதிவ நர ஸ்ரீ ஸமர வாநு|| ஒளிர்சடைநாது எல்லையில்லாதமகிமையையறியவும் உனதுசரணாரவிந்தங்களில் உறுதியுடன் அன்பைச்செலுத்தவும். உனதுபூஜைகளால் பூர்ணமான பிரஸாதத்தைப்பெறவும் உலகத்தில்ஒருவனேசக்தன்என்றனர். அங்ஙனமேஆசிரியர்அநந்ததாரும்

ப்ரஹ்மாத்யைர்தேவைஸ்ஸர்வைஸ்ஸங்க்யைர்ஜ்யோதிர்பி: [illegible] | [illegible] ஓம் ஸ்ரீ [illegible]

ஓ பரமேசுவர இப்பத்மனாபன் பரப்பிரும்மமென்றும் பரதத்துவமென்றும் பரஞ்சோதியென்றும் சொல்லப்படுவோன். உபாஸனையிலாழ்ந்து உன்னிலும் வேறுகாது நின்றவுணர்தலின் கருடபாவனை செய்யும்மாந்திரிகன் கருடனாவதுபோல் ஆயினனென்றார். ஸ்ரீமத் ஜகத்குருஸ்வாமிகளும் 'சிதம்சம் விபும் நிர்மலம் நிர்விகல்பம்' சிதம்சனும் விபுவாயும் நிர்மலனும் நிர்விகல்பனுமுள்ளவனென்று ஸ்ரீவிஷ்ணுபுஜங்கஸ்தோத்திரத்தில் ஹரியைத் தோத்தரித்தனர். எமது ஆசிரியரும் '[illegible]' யான் அரவத்தரசனுடலுறுபடுக்கையில் பாற்கடலில் படுத்திருந்த அறியேன் என்று சிவஞானிகளில் கண்ணனையே முதல்வனென்று கூறினார்கள்; இவையெலாம் இவ்வசனத்தின் கருத்தேயாமென்க. இதன் விரிவை போகாவலி நூலிலும் எமது தைத்திரிய ஆருணபாஷ்யத்திலும் தையித்திரிவித்தையிலும் காணலாம். எ—று.

அவதாரணிகை.

இனி சிருஷ்டி சங்கற்பஞ்செய்த நாராயணனிடத்துத் தோன்றிய சிருஷ்டியின் முறையைக் கூறுகின்றார்.

நாராயணாத் ப்ராணோ ஜாயதே
மந: ஸர்வேந்த்ரியாணி ச|
கம் வாயுர்ஜ்யோதிராப:
ப்ருதிவீ விச்வஸ்ய தாரிணீ|| எ—று

(இ—ள்.) நாராயணனிடத்து பிராணன் உண்டாகின்றது. மனம் உண்டாகின்றது. எல்லா இந்திரியங்களும் உண்டாகின்றன. ஆகாசம் வாயு சோதி நீர் எல்லாவற்றையும் தரிக்கும்பிருதிவி (இவைகள்) உண்டாகின்றன. எ—று.

(வி—ரை.) பிராணாகாசாதி ஸமஸ்தசிருஷ்டிகளும் விராட்டின்முகமாய்த்தோன்றுவனவாம் என்றுவேறு பலசுருதிகளையும் இவ்வுபநிடதம் நிரூபித்ததாமென்க. இதனால் ஆன்மவர்க்கங்களுக்கேற்றவாறு தனுகரண புவனபோகசிருஷ்டி சுருக்கியுரைக்கப்பட்டது. எ—து.

அவதரணிகை

எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் அவரேயெனக் கூறுகின்றார்.

நாராயணாத்ப்ரஹ்மா ஜாயதே
நாராயணாத்ருத்ரோ ஜாயதே
நாராயணாதிந்த்ரோ ஜாயதே
நாராயணாத்ப்ரஜாபதய꞉ ப்ரஜாயந்தே
நாராயணாத்த்வாதஶாதித்யா꞉
ருத்ரா வஸவஸ்ஸர்வாணி ச²ந்தா³ꣳஸி
நாராயணாதேவ ஸமுத்பத்யந்தே
நாராயணாத்ப்ரவர்தந்தே
நாராயணே ப்ரலீயந்தே॥ என்று

(இ—ள்.) நாராயணனிடத்தில் பிரமா உண்டாகின்றார். நாராயணனிடத்தில் உருத்திரன் உண்டாகின்றார். நாராயணனிடத்தில் இந்திரன் உண்டாகின்றார். நாராயணனிடத்தில் பிரஜாபதிகள் உண்டாகின்றார்கள். நாராயணனிடத்தில் துவாதசாதித்தியர்கள் ருத்திரர்கள் வசுக்கள் எல்லாச்சந்தங்களும் நாராயணனிடத்தே உண்டாகின்றன. நாராயணனிடத்தே இருக்கின்றன. நாராயணனிடத்தேலயிக்கின்றன. எ—து

(வி—ரை.) பிரமா=சதுர்முகன்; ருத்திரன்=ருத்திரன், சம்ஹாரகர்த்தா; க்ஷயகாலே ஸம்ஹர்த்தா ருத்³ர꞉ தமோமய

ஸமாவ்ருத:| த்வத்ப்ரஸாதாஜ்ஜகத்தாதா ரஜஸா ச பிதாமஹ:|| உன்கோபத்தில உண்டானவன் ருத்திரன் தமோகுணத்தால் சூழப்பட்டவன். உன்பிரசாதத்தால் உண்டானவன் உலகத்தைப்படைக்கும் பிரமன் ரஜோகுணமுள்ளவன். என்று புராணம் நிரூபித்தலால், பிரஜாபதிகள் = திக்பாலகரும் மனு முதலியோரும் ப்ரஹ்மா ஸ்தாணுர்மநுர்தக்ஷோ ப்ருகுர்தர்மஸ்தபோதம:| ஏகவிம்ஶதிருத்பந்நாஸ்தே ப்ரஜாபதய: ஸ்ம்ருதா: பிரமா, தாணு, மனு, தக்ஷன், பிருகு, தருமன், தயன், தமன் என்பதாதி இருபத்தொருவர்பிறந்தார்கள. அவர்களேபிரஜாபதிகளெனப்படுவோர் என்று விஷ்ணுபுராணம் நிரூபித்தலால் "சந்தங்கள்" என்பன வேதங்களுக்கும் குறிப்பெயராம். இதனால் சிருஷ்டி திதி லய மென்றமுத்தொழிலும் இவரிடத்து உலகத்துக்கு நிகழுமாதலின் இவனைபிரமமென்றது என்பது முடிந்தது.

அவதாரணிகை

இங்ஙனம் பிரமமே உலகத்திற்கும் உபாதானமும் நிமித்தமும் என்றவிஷயத்தில் வேறுவேதங்களின் சம்மதியையும் காட்டுகின்றார்.

ஸைதத்ருக்ஷு ஶிரோதீயதே || ௭—௩

(இ—ள்) இதனை ரிக்குவேதத்தின் சிரசு நிரூபிக்கின்றது,

(வி—ரை.) ரிக்குவேதத்தின் இறுதியில் ஐதரேய ஆரண்யகத்தில் பிரத்தியகாத்மாவின் சிருஷ்டி நிரூபிக்கப்படுதலானும், இறுதியிலவனுக்கே கர்ப்பவாஸஞ்சொல்லப் படடமையாலும் லீலாவதாரங்களில் கெர்ப்பவாஸத்தை யடைந்த ஸ்ரீமன் நாராயணனது ஜகத்காரணத்துவமும் இங்கு விரிக்கப்பட்டதேயாமென்பது கருத்து.

அவதாரணிகை

இனியவர் சர்வசுவ ரூடவென்கின்றார்.

நித்யோ தேவோ நாராயண:
ப்ரஹ்மா நாராயண:
ஶிவஶ்ச நாராயண:
ஶக்ரஶ்ச நாராயண:
காலஶ்ச நாராயண:
திஶஶ்ச நாராயண:
விதிஶஶ்ச நாராயண:
ஊர்த்வஶ்ச நாராயண:
அதஶ்ச நாராயண:
அந்தர்பஹிஶ்ச நாராயண:
நாராயண ஏவேதம் ஸர்வம்
யத்பூதம் யச்ச பவ்யம் ‖ எ—து

(இ—ள்) இனி நித்தியன் நாராயணன். பிரமா நாராயணன், சிவனும் நாராயணன். இந்திரனும் நாராயணன். காலமும் நாராயணன். திக்குகளும் நாராயணன். விதிக்குகளும் நாராயணன். மேலும் நாராயணன். கீழும் நாராயணன். உள்ளும் வெளியும் நாராயணன். காணப்படுவதெல்லாம் நாராயணன். எது சென்றது, எது வருவது அதுவும். எ-று

(வி—ரை.) நித்தியன் = எவ்வித விகாரமுமற்றவன்; மூக்காலங்களாலும் பாதிக்கப்படாதவன். ஆதலாற்றான் அவனுகிய, அதிஷ்டானத்தின்கண் கற்பிக்கப்பட்ட ஜடஜீவ ஈசுவரப் பிரபஞ்சமெல்லாம் அவனேயென நிரூபிக்கப்படுகின்றது. ஒரு அதிஷ்டானத்தின்கண்ணே அத்தியசிக்கப்படும் பொருளுக்கெல்லாம் அதிஷ்டானத்தின் ஸத்தையின்றி வேறு ஸத்தையின்மையால் அங்ஙனம் கூறியதாமென்க. அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித: உள்ளும் புறம்பும் அதனையெல்லாம் வியாபித்து நின்றனன் நாராயணன், என்று சுருதி கூறிய உண்மை இந்த உபநிடதவசனத்தால் தழுவப்பட்டதென்க. வா-ரு

[illegible] யஜ்ஞம் யஜ்ஞ[illegible] புருஷனே[illegible]லாம். சென்றது இது வருவது இது என்பதாதி அனேக சித்தாந்த வாக்கியங்கள் இக்கருத்து உடையனவேயாம் எனக.

அவதரணிகை

இனி நாராயணனிடத்து நாராயணத்தன்மையாகிய லக்ஷ்மீபதித்வமும் கற்பிதமேயாமென நிரூபித்து எஞ்சுவது அறிவு மாத்திரையேயாதலால் அதனை தியானிக்கும் முறையையும் பயனையும் குறிக்கின்றார்.

நிஷ்களங்கோ நிரஞ்ஜனோ
நிர்விகல்போ நிராக்யாத:
ஶுத்தோ தேவ ஏகோ நாராயண:
ந த்விதீயோஸ்தி கஶ்சித்
ய ஏவம் வேத ஸ விஷ்ணுரேவ பவதி
ஸ விஷ்ணுரேவ பவதி
[illegible] யஜுர்வேத ஶிரோதீதே எ—று.

(இ—ள்) களங்கமில்லாதவன் நிரஞ்சனன் நிர்விகல்பன் தொழில் இல்லாதவன் சுத்தன் தேவன் ஒருவன் நாராயணன். இரண்டாவதொருவன் இல்லை. எவன் இப்படியறிவான் அவன் விஷ்ணுவேயாவான். இதனை யஜுர்வேதத்தின் சிரசு நிரூபிக்கின்றது எ—று.

(வி—ரை) "களங்கமில்லாதவன்" = எவ்விதக்குற்றமும் தம்மிடம அணுகப்பெறாதவன். "தொழில் இல்லாதவன்" = நிஷ்கிரியன். இதனால் நிஷ்களம் நிஷ்க்ரியம் ஶாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜனம் | அம்ருதஸ்ய பரம் ஸேதும் தக்தேந்தனமிவானலம் என்றும் யதா சர்மவதாகாஶம் வேஷ்டயிஷ்யந்தி மானவா: | ததா ஶிவமவிஜ்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி, என்றும் நிஷ்க்

னும் கிரியை இல்லாதவனும் சாந்தனும் தோஷமில்லாதவனும் உபாதிஹீனனும் அமிருதத்தின் புறத்துச்சேதுவாய் கட்டையைக் கொளுத்திய தழல்போல் உள்ளவனை அறியாமல் துயரத்துக்கு முடிவுவரவேண்டுமானால், என்றுதோலைப்போல் ஆகாயத்தைமனிதர் போர்த்துக்கொள்வார்கள். அன்றே, அதுகூடும் என்ற பொருளுள்ள சுருதிகள் தழுவப்பட்டனவாம். மேற்கண்ட சுருதிகளில் ஞானமே மோக்ஷசாதனமெனக்குறிக்கப்பட்டமையால் அதனையேவற்புறுத்துகின்றார் "இப்படியறிவான" என்பதாதியால். "இப்படியறிவான்" = மேற்கண்டலக்ஷணப்படிபிரம்மத்தையறிவான்; அவன் விஷ்ணுவேயாவான் = விஷ்ணுசுவருபத்தையே பெற்று இறுதியில் பரமமோக்ஷத்தைப்பெறுவான். உண்மையில்சர்வசுருபனாகபரமேசுரனை வழிபட்டால் ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி, பிரம்மத்தையறிந்தவன் பிரமமேயாவான் என்றபடிசர்வசுருபனுவன் என்பது கருத்து. இது "யஜுர்வேதத்தின்" சித்தாந்தம் என்றதால் யஸ்த்வைவம் ப்ராஹ்மணோ வித்யாத் | தஸ்ய தேவா அஸந்வஶே ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ அவ்வணமெந்தப்பிராம்மணனறிவான் அவன்வயத்திமையோரனைவரும் நிற்பர். அந்த ஹரியும் இலக்குமிதானும் பத்தினி என்னப்படுவாரன்றே என்பதும் விஷ்ணோஸ்ஸாயுஜ்யம் கச்சதி ஸர்வாந்லோகாந்ஜயதி விஷ்ணுசுவருபம்பெற்று இந்தஉலகங்களையெல்லாம் ஜயிப்பான் என்பதும் யஜுர்வேதத்தில் உள்ளதாதலால் அநுவதிக்கப்பட்டதென்க. இருமுறை கூறியது ஆதரவைக் குறிப்பதற்காக.

அவதாரிகை.

இனி ஞானசாதனமானமந்திரயோகத்தைக்குறிக்கின்றார்.

ஓமித்யக்ரே வ்யாஹரேத் நம இதி பஶ்சாத்

நாராயணாயேத்யுபரிஷ்டாத்

ஓமித்யேகாக்ஷரம் நம இதி த்வே அக்ஷரே

நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி

ஏதத்வை நாராயணஸ்யாஷ்டாக்ஷரம் பதம் ||

(இ—ள்) ஓம் என்று முதலில் சொல்லவேண்டும் அப்புரம் நமவென்று அப்புறம் நாராயணவென்று. பிரணவம் ஓரெழுத்தும் நமவென்பது இரண்டெழுத்து நாராயணாய வென்பது ஐந்தெழுத்துகள் இதுவே நாராயணனது அஷ்டாக்ஷரபதமாம்.

(வி—ரை) மந்திரத்தை உபதேசமுறையால் ஒன்று வெளியிடுவது கூடாமைபற்றி அத்திருமந்திரத்தினமைப்பைப் பிரித்து பற்சிறுபகுதிகளாயுபதேசிக்கின்றார். முன்னர் பின்னர் என்றது முறையைக் குறித்ததாம். ஸ்ரீபஞ்சாக்ஷரத்திருமந்திரத்தைப்போல உயிர்மெய்யெழுத்துகளை உள்ளபடி பெற்றதாயாவது ஸௌராஷ்டாக்ஷரத்தைப்போல் கௌணமாக எண்ணை ஏற்றதாயாவது இம்மந்திரம் ஆகுமோவென மற்றவருக்குண்டாம் மதிமயக்கத்தை விலக்கக்கருதி இம்மந்திரம் இயல்பில் ஏழெழுத்துடையதாயினும் பிரணவத்தைச் சிரமேற்கொண்டு திருவெட்டெழுத்தாமென்றது. பதமென்பது உணர்த்துவதெனப்பொருள் கொள்ளுமாயின் யாவனையுணர்த்துவதென விருநிகழ, ஸ்ரீமன் நாரணனை எனவேதம் விடைபகர்ந்தருளியது. இங்கு நமவென்ற பதத்தின் பொருளாய ஜீவனை நாராயணவென்ற பதத்தின் பொருளாய ஈசுவரனிடத்து பிரணவத்தால் ஒன்று சேர்ப்பது மந்திரத்தின் முடிந்தகருத்து. அவ்விதம் மந்திரப்பொருள்முடிக்கும் முறையை விரிவாய் சிவதத்துவசுதாநிதிக்கு யாம் செய்த சிந்தாமணியுரையில் பஞ்சாக்ஷரவிவரணப்பிரகரணத்திலும் வேறு உபநிடதங்களில் அதேபிரகரணத்திலும் காணலாம். பிரணவத்தை ஏகாக்ஷரமென்று ஓர்மந்திரமாகத் தனித்துக் காட்டியவேதத்தின் கருத்து மற்றையப்பகுதிகளான ஏழெழுத்துகளின் பொருள்களும் இவ்வோரெழுத்தின் கண்ணே அமைந்தனவாம் என்பதேயாம். ஆதலாற்றான் தாரசாரோபநிடதத்தின் பிரணவமே சூக்குமாஷ்டாக்ஷரமெனப்பட்டது. அதன் விரிவை அங்கேகாண்க. (எ—து)

அவதாரணிகை.

இனி இம்மந்திரமறிந்தவனைப் புகழ்கின்றார்.

யோ ஹ வை நாராயணஸ்யாஷ்டாக்ஷரம்
பதமத்யேதி அநபப்ருவஸ்
ஸர்வமாயுரேதி விந்ததே ப்ராஜாபத்யம்
ராயஸ்போஷம் கௌபத்யம்
ததோऽம்ருதத்வமச்னுதே
ததோऽம்ருதத்வமச்னுத இதி
ய ஏவம் வேத இத்யுபநிஷத் ‖ எ—று

(இ—ள்.) எவன் நாராயணனது அஷ்டாக்ஷர பதத்தைப்படிப்பான் அவன் ஓதாமலேஆயுளைபூரணமாய் பெருவான். பிரஜாபதி பதத்தையடைவான். ஐசுவரியத்தையும் வாக்பதித்துவத்தையும் பெற்று பிறகு அமிருதத்தன்மையையடைவான்பிறகுஅமிருதத்தன்மையையடைவான் என்று சாமவேதத்தின் சிரசு சொல்லுகின்றது. எ—று

(வி—ரை.) இவ்வஷ்டாக்ஷர மஹாமந்திரமானது வேதசாரமாதலால் வேதங்களைமுறைப்படி முதலாச்சிரமத்தில் இருந்து கற்றுணராதவருக்கும் முறைவழாது அவ்வாச்சிரமமுடையோர் பலமாய பூரண ஆயுளை இம்மந்திரமே கொடுத்தருளுமென்றது உசிதமாம். அதனையே விரிப்பது பிரஜாபதிபதத்தையடைவான் என்பதாதி மேல்வாக்கியம். "பிராஜாபதிபத"மென்பது மரீசி முதலிய பெரியோர்இடம். "ஐசுவரியமென்பது" அணிமைமுதலிய எண்வகைச்சித்திகள். வாக்பதித்துவமென்பது நாமகள்நாதனாய நான்முகன் பெருமை. பிறகு=பிரமலோகத்தை யடைந்த பிறகு முறைப்படி பிரமலோகத்தைப்பெற்று அங்கு பிரம விசாரத்தையும் ஒருவாறு செய்து பரார்த்தாந்தியகாலத்தில் மோக்ஷத்தைப் பெறுவாரெனபது அவ்வாக்கியத்தின் கருத்து. மோக்ஷமேமுக்கியப் பயனாதலால் அதனை இருமுறைகூறியதென்க. இதனைசாமவேதத்தின் சிரசு = சாந்தோக்கியம்முதலியது. அவ்வுபநிடதத்தில் உலகபரம்பரைகளும் உற்கீதவித்தையும் நிரூபிக்கப்படுதலாலெனக.

[illegible]

உபநிஷத்வித்யா

அவதரணிகை

இனி இங்கு நினைக்கப்பட்டபிரணவத்தின் சுவரூபத்தைச்சி றிது விரிக்கின்றார்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ‖ எ—ஆ

(இ—ள்) பிரத்தியகானந்தமான பிரம்மபுருஷன் பிரணவஸ்வரூபமாம். அகாரம் உகாரம் மகாரம் இவைகளை யொன்று சேர்த்தால் பிரணவமாம்.

(வி—ரை) பிரத்தியகானந்தம்=பிரத்தியக்கு என்பது ஜீவரூபம், அதன் சுவரூபமாய் நிற்கும் ஆனந்தம்; பிரமம்=ஈசுவரஸ்வரூபம்; புருஷன்=இவ்விருவகை உபாதியையுங்கடந்தது இதனை இங்ஙனம் தியானிக்கவேண்டுமென 'வருவித்துக்கூட்டுக. அதன் உருவத்தை நிரூபிக்கின்றார் அகாரமென்பதாதியால். பிரத்தியகாநந்தமான என்றது அகாரத்தின் பொருள் ஆதலால் எல்லாச்சீவர்களின் சமஷ்டி சுவரூபமான விராட்டெனப்படும் ரஜோகுணமுடைய பிரமன் அதன்பொருள். இரண்டாவது வித்தையை உபாதியாய் உடைய ஈசுவரசுவரூபமான சத்துவகுணமுடைய விஷ்ணு உகரப்பொருள். மூன்றாவதான முப்புரமெரித்த புருஷனெனப்படும் தமோகுணமுடைய ருத்திரன் மகரப்பொருள். ஆக இம்மூன்றும் சேர்ந்ததே மூலமந்திரமாம் இதனால் [illegible] அகாரமாகிய பிரம்மதேவனைத்தொப்புளில் உகாரமாகிய விஷ்ணுவை ஹிருதயத்தில் மகாரமாகிய ருத்திரனைப் புருவநடுவில் ஓங்காரமான ஸர்வேசுவரனை துவாதசாந்தத்தில் என்பதாதி பலவேதாந்தங்கள் தழுவப்பட்டனவாமென்க.

அவதரணிகை

இனி நாராயணமந்திரத்தை ப்ரணவத்துடன் சேர்த்துஜ பித்தவருக்கு அமையும் பலவிசேஷத்தைக் குறிக்கின்றார்.

யஓ-க்ஷாஓ-வ)ெதயொமீ
ஜந்மஸம்ஸாரவம்யநாக்
ஒம்நமொநாராயணாயெதி
ஓம்தெராவாஸகொவெகுண்
ஸயநம்ஹதிஷ்டதி ‖ எ—ற

(இ—ள்.) எதனை உச்சரித்து யோகியானவன் ஜன்ம ஸம்ஸாரபந்தங்களில் இருந்து விடுபடுவான் அந்தநாராயணா ஷ்டாக்ஷரமந்திரத்தை உபாஸிப்பவன் வைகுண்டஸ்தானத் தையடைவான்.

(வி—ரை.) உச்சரித்து = ஜபித்து; முறைப்படிஆவர்த்தஞ்செய் து என்பதுகருத்து. ஜன்மஸம்ஸாரபந்தங்கள் = ஜன்மமென்ற பி றப்பையடியாய்க்கொண்ட சம்சாரமாகிய பந்தத்தினின்று. யோ கி = சுவரூபத்தையறிந்து அதனிடத்தே நிஷ்டைகூடினவன்; வி டுபடுவான் = விடுபெறுவான். அப்படியானால் எங்ஙனம்முன்னிருபி த்த கிரமமுக்தி இம்மந்திரோபாஸனையின் பயனாகுமெனின் அத னை நிருபிக்கின்றார் வைகுண்டத்தை யடைவான் என்பதால். இம் மந்திரோபாஸகன்கோலோகத்திலும் மேலான வைகுண்டலோகத் தை இருந்தடைந்து அங்கிருந்துமுக்தியைப்பெறுவானெனப்பொ ருள்கோடலால் குற்றமில்லையாமென்க. பிரமலோகத்திற்கு மேல் கோலோகமென்றும் அதன் மேல் விஷ்ணுலோகமென்றும் சுரு திபுராணங்களில் நிருபிக்கப்பட்டிருக்கின்றது வருமாறு. தெ தயாஓாநூஹ்ஷீமஓஜெ)மாவொயதூ ஹஒரிஶ)ூம்ஹா கயாஸஂ। கதூாஹதஃ-ஈ-ஹாயஸ் விஷெணாஂவாஈஓம்வ ஃஓவஹாதிஸஒரிஈஂ— உனதுபிரசித்தமான லோகத்தையடை யவிரும்புகின்றோம். எந்தவிடத்தில் பெருங்கோடுடைய புண்ணி மூர்த்திகளான நந்தைமுதலிய கோக்கள் குடியிருக்கின்றன அ

தன்மேலன்லவோ பெரும்புகழுடைய பெரியோனாகிய விஷ்ணுவினது அப்பரமபதம் விளங்குகின்றது என்று வேதமும், [illegible] = சுவர்க்கத்தின்மேலேபலமஹரிஷிகளால் ஸேவிக்கப்பட்ட பிரமலோகமிருக்கின்றது அதன்மேரில் கோலோகமிருக்கின்றது அதனை ஸாத்தியர்கள் ரக்ஷிக்கின்றுர்கள். ஹேகிருஷ்ண மஹாகாசத்தில் உள்ளபெரியோனாகிய நீர் எங்குமுள்ளவர் உமக்கு அதன்மேலும் தபோமயமானகதியுண்டு என்று மஹாபாரதமும், [illegible] = பிரமலோகத்திற்குமேலே நித்தியமானவிஷ்ணுலோகமுள்ளதென்றுவேறுபுராணவசனமும். [illegible] = பிரமலோகபரியந்தம் ஓ அர்ஜுனஉள்ளலோகங்களெல்லாம்மீளுகியுள்ளனவே. எந்தவிடத்தில் போனவர் மீளார் அது எனது ஸ்தானமாம் என்ற கீதாவசனமும், இவ்விஷயத்திற் பிரமாணங்களாம். இதிலுள்ளவிசேஷங்களை ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதரவர்களருளிச்செய்த ரத்னத்திரயபரீக்ஷையிற் காண்க. இதனால் ஸ்ரீமன்நாராயணனது திருமந்திரத்தை முறைப்படி ஆசிரியன் பாற்கற்று உபாசிப்பவன் அற்புதமான வைகுண்டபதவியைப்பெற்று அங்கு ஸ்ரீமன் நாராயணனருள்வலியால் பாரதத்துவத்தினிடத்தில் சாயுஜ்ஜியத்தைப் பெருவானென்று கருத்துமுடிந்தது.

அவதாரணிகை

இனி உபாசனைக்காக ஹிருதயம் முதலியஸ்தானங்களின் அமைப்பை சுருக்கி நிரூபிக்கின்றார்.

[illegible]
[illegible] ॥ எ—[illegible]

(இ—ள்) இந்தத்தாமரை விஞ்ஞான கனமாயுள்ளது அதனிடத்தே இருந்து மின்னற்கொடிபோன்ற பிரபை யுடையது மட்டுமாய்- ரு—து

(வி—ரை) இந்தத்தாமரை=இந்த இதயத்தாமரை; விஞ்ஞான கனம்=ஞானாகாசமமையப் பெற்றது; ஆச்சிதம்பரத்தின்கண்ணே மின்னற்கொடி போன்ற ஆத்மசுரூபம் இருக்கின்றதாம் என்பது இதன்முடிந்த கருத்து. [Grantha text] — அதனடுவே மேநோக்கிச் சிறியதாய் ஓர் அக்னிசிகையுண்டு. அது கருத்தமேகத்தின்கண்ணே உள்ளமின்னற்கொடி போன்றது என்று வேதங்கூறுதலால் மின்னல்கொடி போன்ற சோதியே இதயநடுவில் தியானம் செய்யத்தகுந்ததென்பது இதனால் பெறப்பட்டது. அந்த இதயாக்னி தைத்திரீய மஹோபநிடதத்தில் விருபாக்ஷனைத்தியானிக்கும் இடமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்தைத்திரீய மஹோபநிடதத்திலே இவ்விஷயமமைந்தாற்போல இங்கும் நாராயணப்ரகரணத்திலேயே அமைந்திருப்பதால் பொருட்பொருத்தச் சொற்பொருத்தங்கள் அங்குள்ளபடியே இங்கும் அமைக்கவேண்டுமென்க. எ—து

அவதரணிகை

தைத்திரீய மஹோபநிடதத்தில் ஸ்ரீமந் நாராயணனைத் துதித்தாற்போல இங்கும் துதிக்கின்றார்.

[Grantha text]
[Grantha text]
[Grantha text]
நாராயணம் காரண ... காரணம்
[Grantha text] ॥ எ—து

(இ—ள்) பிரம்மண்ணியனும் தேவகிபுத்திரன். பிரம்மண்ணியனும் மதுசூதனன். சர்வபூதங்களிலுமுள்ளவன் ஒ

ருவன், நாராயணன் காரணபுருஷன். அகாரணன் பரப்பிரம்மம் பிரணவமாம். எ—து

(வி—ரை) பிரமண்ணியன் = பிரமம் என்ற ஒன்றன்பாற் சொல்லுக்கு வேதம், தத்துவம், தவம் இவையெலாம் பொருளாதலின் அவற்றிற்கு ஹிதம்செய்பவன் அவற்றிற்குண்டாம் இடையூர்களை விலக்கியவற்றைக்காப்பவனும். பிரமா என்றசொல்லுக்கு ருத்திரனும் இருகுறிப்பொருளாதலால் அவனுக்கு இதமாயுள்ளவன். தோழனென்றபொருளிலும் அச்சொல்லையமைக்கலாம். ஆயின் ஸ்ரீமந் நாராயணன் தேவகிபுத்திரனையும் மதுசூதனனையும் திருவவதாரம் செய்ததெல்லாம் வேதம் தத்துவம் தவம் பிராம்மணர்கள் இவர்களைக்காக்கவும் ஸ்ரீருத்திரமகிமையைவிளக்கவுமேயாமென்றதாயிற்று. வைஜயந்திகோசத்தில் "ப்ரஹ்மா ருத்ரே" பிரம்மாவென்றசொல் ருத்திரனைக் குறிக்குமென்று நிரூபிக்கப்படுதலாலென்க. அவரைக் காரணபுருஷனென்றது "ப்ரஹ்மா ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரா ஜகதஃ காரணத்ரயம்" யானும் பிரம்மதேவனும் உலகத்திற்கு மூன்றுகாரணங்களாம் என்று ஸ்ரீமந் நாராயணன் வாக்கியத்தால் கிடைத்ததென்க. அகாரணன் = உண்மையிற்சைதன்னியத்திற்கு வேறுகாரணமின்மையால் பரப்பிரமம் "நாராயண பரம் ப்ரஹ்ம" நாராயணன் பரப்பிரமம் என்று சுருதி கூறியபடி அதன் சுவரூபமாயுள்ளவன்; பிரணவம் = பிரணவ ஸ்வரூபமாயுள்ளவன்; இவ்வகையாய் அவனைத் தியானிக்க வேண்டுமென வருவித்துக்கூட்டுக: இதனால் யோகிகளில் முதல்வனான வெளதிகயோகிக்கு சிவதருமபூதனான நாராயணனை சிவாபின்னனாகத் தியானிப்பதே மோக்ஷ ஹேதுவாமென்றது நிரூபிக்கப்பட்டது. இவ்வுண்மையை அப்பயதீக்ஷிதர்கோமான் தானருளியரத்தினத்திரயபரீக்ஷையில் "பௌருஷம் ஸம்ஸ்திவ ஜகதாம் ப்ரஹ்ம வைதிகத்ருஷ்யாபோக்தாயதிஷ்ணோவ்ர விவப்ரக்ஷவிஷ்ணு பாபவிஷ்ணுச்சித்திர்த்தா। யஸ்யாவாஸந ஸஞ்ஜக வாஜஹ விஷ்ணுவிக்ஷ நாராயணோத்ரவ்ராக்ஷ்ரீ கணஃ காமாங்ரா ரமா தேஜஸ் நாராயணவிவாகேஸ்ரீ!" ... மேலவனும்; அவன் பரப்பிரம

என்றுவேதங்களெடுத்துப்பேசும்; அயனது தர்மமம்பிகையாகும் என்றுமபிரியாவுமையவளென்பர். வேறொரு தருமம் நாராயணனும் அவனேயுலகப்பிரகிருதியாமவன்; அவனே பரமபுருஷனுமென்பர்; கூர்மபுராணம் கூறியதிதுவாம்; நாரதபுராணம் காட்டியதிதுவே என்றசெய்யுளின்கண்ணும் அதினுறையினும்நிரூபித்திருக்கின்றார்; ஆதலினும் அநேகயதனைக்காண்க. இக்குறிலரைக்காரணபுருஷரென்றுகாட்டியமையால் [illegible] அவன்காரணம் காரணாதிபதிகளுக்கதிபதி என்று சுவேதாசுவதரம் கூறியது பரமசிவனேயாமென்க. அதர்வசிரஸ்ஸில் ஓங்காரம் பரப்பிரமம் என்ற சொற்கள் சிவனுமமே என்று நிரூபிக்கப்பட்டமையால் அச்சொற்களால் ஸ்ரீமந் நாராயணனைத் துதித்ததே இஃதாமென்க. அதனாற்றான் ஸ்ரீஜகத்குருஸ்வாமிகளும் ஸ்ரீஸகஸ்ரநாமபாஷியத்தில் [illegible] சிவாதிநாமதேயங்களால் ஹரியேஸ்தோத்திரம் செய்யப்படுகிறாரென்றார் ஆதலால் இம்மந்திரத்தின் கருத்து சர்வபரிபூரண பிரமலக்ஷணத்துடன் ஹரியை உபாசிக்க வேண்டுமென்பதே. எ-று

அவதாரிகை

எந்தருத்திரன் அந்தகன் [illegible] வாக்யங்களால் அதர்வசிரஸ்ஸென்னும் உபநிடதத்தில் சர்வதேவதாஸ்வரூபமாக பரமசிவனைத்தியானிக்கவிதித்தமையால் நாராயணனைத் தியானிப்பதும் அவ்வுபநிடதத்திற்குச் சம்மதமேயெனக் காட்டுகின்றார்.

[illegible] எ-று

இங்ஙனம் அதர்வணசிரம் சொல்லுகின்றது. எ-று

அவதாரிகை

இறுதியில் வித்தையின் மஹிமையைக் குறித்து உபசங்கரிக்கின்றார்;

[illegible]

[illegible]

𑌶𑌯𑌤𑌿 𑌸𑌾𑌯𑌂𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑌧𑍀𑌯𑌾𑌨𑍋𑌽𑌪𑌾𑌪𑍋
𑌭𑌵𑌤𑌿 𑌮𑌧𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍋𑌽
𑌧𑍀𑌯𑌾𑌨𑌃 𑌪𑌞𑍍𑌚𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑍋𑌪𑌪𑌾𑌤𑌕𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑍁-
𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌪𑌾𑌰𑌾𑌯𑌣𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌲-
𑌭𑌤𑍇 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨𑌾-
𑌰𑌾𑌯𑌣𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇-
𑌦 𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌨𑌿𑌷𑌤𑍍 ||

(இ—ள்) காலையில் படிப்பவன் ராத்திரிபாவத்தைத் துலைப்பான். இரவில் படிப்பவன பகல்பாவத்தைத்துலைப்பான், இருகாலங்களிலும் படிப்பவன் பாபியாயினும் பாபஹீனனாவான். மத்தியானகாலத்தில் சூரியனைநோக்கிப்படிப்பவன் பஞ்சமஹாபாதகங்களினின்றுமஉபபாதங்களினின்றும்விடுபடுவான். ஸர்வவேத பாராயணபுண்ணியத்தைப் பெறுவான். எவன் இதனையறிவான்அவன் நாராயணஸாயுஜ்ஜியத்தைப் பெறுவான் நாராயணஸாயுஜ்ஜியத்தைப்பெறுவான்: என்பது உபநிஷத்து.

(வி—ரை) வித்தையின்பயனைக் குறிக்கத்தொடங்கினமையால் இவ்விடத்து ஸ்ரீமன்நாராயணாஷ்டாக்ஷரதிவ்யமந்திரமகிமையையெடுத்து நிரூபித்துப் பொலிவு எய்தியது, சுபம்.

இங்ஙனங் கவுணியகுலப் பாலாழிக்குக் கவுத்துவ மணியாய்த்தோன்றி, ஸ்ரீமேதாதக்ஷிணாமூர்த்தி கருணாகடாக்ஷத்தாற் சகலகலைகளுமோதியுணர்ந்து மிச்சிரமண்டலத்திற் றமது விஜயப்பிரதாப நிலைபெற நாட்டிய மஹாதேவதீக்ஷிதர் வம்சதிலகராய வையாகரண ஸார்வபௌம ஸ்ரீ. ராமஸ்வாமிதீக்ஷிதர் செல்வக்குமாரரும் ஸ்ரீஸீதாம்பா கர்ப்பசுக்தி முக்தமொத்தவரும், ஸ்ரீமத் பாரத்வாஜ குலஜலதிக்குக் கவுத்துவமணியாய் அத்வைதவித்தியாசாரியராய், நூற்றுநாலுகிரந்தங்களை நிர்வகித்தருளிய ஸ்ரீமத் அப்பையதீக்ஷிதேந்திரர் வம்சத்தில் அவதரித்த ஷட்சாஸ்திரவல்லபபாரமேசுவர உபநிஷன் மார்க்கப்பிரவர்த்தக ஸ்ரீ மஹா மஹோபாத்தியாய

ஸ்ரீமது தியாகராஜகுருபுங்கவர் சரணஸேவாபராயணரும்,
பிரத்யக்ஷபரசிவநிஷ்டா துரந்தர பரசாம்பவ பாதபத்ம
ரேணுசேவனத்திலன் புகந்துள்ள வரும்,
“ப்ரம்மவித்தியா” பத்திராதிபருமான
பரசமய பஞ்சானன பாஞ்சஜன்னிய
பண்டித ஸ்ரீமத்ஸ்ரீநிவாஸமகிபுங்கவர்
வ ட மொ ழி யி லி ரு ந் து
தென்மொழியில் வியற்றிய
நாராயணோபநிஷத்
வி ரு த் தி
முற்றிற்று.

நாராயணோபநிடதத்தின்
தாற்பரியசங்கிரகம்

இந்நாராயணோபநிடதம் ஸ்ரீமந்நாராயணன் வழிபாட்டினுண்மையையும் முறையையும் அதற்குரிய திருமந்திரப்பெருமையையும் குறிக்கின்றது. இது தைத்திரியநாராயணோபநிடதச்சாயையேயுள்ளது. இதிலும் அத்தைத்திரீயநாராயணோபநிடதம் சொல்வதுபோலவே சுருக்கமாய் தகராபாஸனஞ் சொல்லப்பட்டது. ஆகவே தகரவித்தையைச்சேர்ந்ததே. இதும் எசுர்வேதத்தைச்சேர்ந்ததாகவே இதனை அதைப்போலவே பொருள் படுத்தினோம். இதுவும் ஸ்பஷ்டமாய் "ப்ரத்யகாநந்தம் ப்ரஹ்மபுருஷம் ப்ரணவஸ்வரூபம்" என்று ப்ரத்யகாத்மாபின்னநாராயணோபாசனையை விதித்தமையாலும், அங்ஙனம் உபாஸிப்பவர் 'விஷ்ணுரேவ பவதி' விஷ்ணுவேயாவான் என்று மோக்ஷம் ப்ரம்மசொரூபமாய்நிற்றலே என்றமையாலும், [illegible] ஜந்மஸம்ஸாரபந்தநாத், என்று அவித்யாமய ப்ரபஞ்சவாசநாக்ஷயமே மோக்ஷமென்றமையாலும் எல்லாமூர்த்திகளும் ஏகமூர்த்தியே என்றமையாலும் சுத்தாத்துவிதசாஸ்திரமேயாம். இதில்எவ்விதசம்சயமுமில்லையாதலால்இதன் தாற்பரியம் ஸ்பஷ்டமேயென்று இவ்வளவுடனே நிறுத்தினோம்.

சுபம

நாராயணோபநிடதத்தின் தாற்பரியசங்கிரகம்
முற்றிற்று.

—(*)—

அகாரணம் = காரணமில்லாதவன்

அத: = கீழ்

அநந்யப்ரேரித = ஒருவர் உபதேசமின்றி

அபாப: = பாபமில்லாதவன்

அம்ருதம் = மோக்ஷம்

அஷ்டாக்ஷரம் = எட்டெழுத்துள்ளது.

அக்ஷரம் = எழுத்து-

அந்தர்பஹி: = உள்ளும்வெளியும்.

ருத்ரா: = ஓர்வகை தேவதைகள்.

இந்த்ர: = தேவராஜன்.

உபபாதகாநி = மகாபாதகத்திற்குக்கீழ்பட்டபாவங்கள்

ஊர்த்வம் = மேல்.

ஏக: = ஒன்று

காரணபுருஷ: = காரணனான்புருஷன்.

கால: = யமன், வேளை.

ப்ரஹ்மத்வம் = பிரம்மத்துவம், சொல்லுக்கதிபதியாயிருத்தல்

சந்தாம்ஸி = யாப்புகள், வேதங்கள்.

தடிதாபம் = மின்னலளவேயுள்ளது

திஶ: = திக்குகள்.

தேவகீபுத்ர: = தேவகியின்புத்திரர்.

நாராயண: = இலக்குமிமணாளன்.

நிரஞ்ஜந: = பற்றற்றவன்.

நிர்வ்யாபார: = தொழிலற்றவன்.

நிர்விகல்ப: = விகற்பமற்றவன்.

நிஷ்களங்க: = குற்றமற்றவன்

பாப: = பாபமுடையவன்.

புண்டரீகம் = இதயதாமரை வெண்டாமரை.

புருஷ: = பூர்ணன், ருத்திரன்.

ப்ரஜாபதய: = பிரம்மா, மரீசியாதியோர்

ப்ரணவஸ்வரூபம் = பிரணவரூபன்

ப்ரத்யகாநந்தம் = ஜீவனானந்தமுடையோன்.

ப்ரலீயந்தே = ஒடுங்கும்.

ப்ரவர்த்தந்தே = நிலைபெறும்.

ப்ராஜாபத்யம் = பிரம்மத்துவம்.

ப்ராணா: = பிராணாதிவாயுக்கள்.

ப்ரஹ்ம = பிரம்மம்.

ப்ரஹ்மண்ய: = பிராம்மணபக்தன் தேவதாவிசுவாஸி

ப்ரஹ்மா = சதுர்முகன், பிராம்மணன்.

பவ்யம் = நடப்பது.

பூதம் = சென்றது.

மதமர்தக: = மதத்தை வென்றவன்.

யோகீ = யோகமுடையோன்.

ராயஸ்போஷ: = பணப்பெருமை, குபேரத்துவம்.

ருத்ர: = ருத்திரன், சிவன்.

ருத்ரா: = ஓர்வகைத்தேவர்.

வஸவ: = வஸுக்கள் ஓர்வகைத்தேவர்.

விஜ்ஞாநகநம் = ஞானமாத்திரசொரூபன்.

விதிஶ: = மூலைத்திக்குகள்.

விஷ்ணு: = விஷ்ணு வியாபகன்.

வைகுண்டபவனம் = வைகுந்தலோகம்.

ஶக்ர: = இந்திரன்,

ஶிவ: = சிவன்.

ஶுசய: = தூய்மையுடையோர்.

ஸம்ஸக்த: = சேர்ந்து.

ஸர்வபூதஸ்தம் = எல்லாப்பூதங்களிலுமுள்ளவன்.

ஸாயுஜ்யம் = நால்வகைமோக்ஷங்களில் கடையிலுள்ளது.

நாராயணோபநிஷத்

[illegible]

ப்ராதரதீத꞉ = ப்ராத꞉ நாம காலே அதீத꞉ [illegible] ॥

௨. [illegible] ॥

௩. ப்ராஜாபத்யம் = ப்ரஜாபதே꞉ [illegible] ॥

௪. ராயஸ்போஷம் = ராய꞉ [illegible] போஷ꞉ [illegible] ॥

௫. கௌபத்யம் = [illegible] ॥

௬. [illegible] ॥

௭. [illegible] ॥

௮. [illegible] ॥

௯. [illegible] ॥

௰. [illegible] ॥

௧௧. விஜ்ஞாநகந꞉ = விஜ்ஞாநம் [illegible] ॥

௧௨. [illegible]

௧௩. [illegible] ॥

௧௪. ஸூரய꞉ = [illegible] ॥

௧௫. காரணபுருஷம் = [illegible]

௧௬. அகாரணம் = [illegible]

௧௭. பரம꞉ = [illegible]

[illegible]।

नारायणोपनिषद्भाष्यविषयानुक्रमणिका।

विषयाः	पृष्ठं	पङ्क्तिः
[illegible]	௩	௧௨
नारायणव्याख्यानम्	௮	௨௧
नारायणः सहस्राक्ष	௨	௯
[illegible]	௰	௧௮
[illegible] नारायणः	௧௧	௧
[illegible]	௧௨	௯
[illegible]	௧௩	௨௫
[illegible] नारायणस्य	௧௫	௧
[illegible]	௧௬	௪
[illegible]	௧௭	௪
[illegible]	௧௮	௨௮
[illegible]	௧௯	௨௨
[illegible]	௨௧	௨௨
[illegible]	௨௧	௨௭

नारायणोपनिषद्भाष्यविषयानुक्रमणिका

समाप्ता